முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 122/2013

வா.சா.1 – தெய்வசிகாமணி

24–06–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவாவின் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரரின் மனைவி மற்றும் மக்கள் என்றால் சரிதான். என் தாயார் நஞ்சம்மாளுக்கு வா.சா.ஆ.4 ன்படி தாவா சொத்துக்களை தவிர வேறு பூமியிலுள்ள சொத்துக்கள் பாகமாக வந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் என் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களையும் சேர்த்து பாகம் கேட்டு என் சகோதரி புஷ்பம் எனக்கு எதிராகவும் பிரதிவாதிகள் 4 முதல் 6 பேருக்கு எதிராக திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் 603/2012 தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

2) தாவா சொத்து தவிர மற்ற சொத்துக்கள் பொறுத்து தரப்பினர்களுக்கிடையே அந்த வழக்கில் சமரசம் ஏற்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.வ.எண்.603/2012 ன் 05.04.2023 ம் தேதி ஏற்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு முன்பு என் அம்மாவிற்கு ஏற்பட்ட சொத்துக்கள் பொறுத்து பாகம் ஏற்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தவர்களை வெளியேற்ற இந்து சமய அறநிலையத்துறை, கோவை இணை ஆணையர் செயல்முறை நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சரிதான். அந்த உத்தரவில் க.ச.எண்.50/2 ல் சுவாதீனத்தில் இருந்த நபர்கள் ஆக்கிரமிப்பாளர் என சொல்லி காலி செய்ய உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் 16.07.2012 ம் தேதியிட்ட செயல்முறை நடவடிக்கைகள் உத்தரவு என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பி.வா.சா.ஆ.2 ஏற்பட்ட பிறகு தான் தாவா தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் இந்த தாவாவின் 6 ம் பிரதிவாதியையும் தரப்பினராக சேர்த்து தான் உத்தரவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தவறாக சாட்சியமளிக்கிறேன் அவர் அதில் தரப்பினராக உள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் சகோதரர் சந்திரசேகர் உயிருடன் இருக்கும் வரை நானும் அவரும் கூட்டாக சுவாதீனத்தில் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் என் தாயார் பெயரிலுள்ளது என்றால் சரிதான்.

5) தாவா சொத்தில் நான் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளதற்கு அவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் தாவா தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ள நபர்களையும் சேர்த்து தாவா தாக்கல் செய்யாமல் சொத்தை அபகரிக்கவேண்டி அவர்களை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் மதிப்பு என்ன என்றால் எனக்கு தெரியாது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.06.24 17:18:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.